பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
08 06 2025 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மதுரை வந்துள்ளார்.

2. உடல் பருமன் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

3. திருப்பூர் மாவட்டம் குமரிக்கல்பாளையத்தில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. அனைத்து துறைகளிலும் தமிழகம் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

5. தைவான் ஓபன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா மேலும் 2 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மாநில பிஜேபி நிர்வாகிகள் கூட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மதுரை வந்துள்ளார்.

இன்று காலை பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் திரு. அமித் ஷா வழிபாடு செய்கிறார்.

பின்னர் மாநில பிஜேபி நிர்வாகிகளுடனான கூட்டத்தில் பங்கேற்கும் அவர், தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் கட்சியின் தயார் நிலை குறித்தும் ஆலோசனை நடத்துகிறார்.

இன்று மாலை ஐந்தரை மணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் அவர் உரையாற்றுகிறார்.

உள்துறை அமைச்சரின் வருகையை ஒட்டி மதுரையில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக மதுரை விமான நிலையம் வந்த திரு. அமித் ஷாவை மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் உள்ளிட்ட முக்கிய பிஜேபி நிர்வாகிகள் வரவேற்றனர்.

<<<<>>>>

உடல் பருமன் மற்றும் அதுசார்ந்த பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், உணவுக் கட்டுப்பாட்டு முறைகளை முறையாக பின்பற்றாவிட்டால் வரும் 2050ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் உடல் பருமனால் பாதிக்கப்படக்கூடிய சூழல் உள்ளதாக கூறினார்.

உணவில் எண்ணெய்ப் பயன்பாட்டை 10 சதவீதம் வரை குறைக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியதை அவர் சுட்டிக்காட்டினார்.

வலுவான நாட்டைக் கட்டமைக்க ஆரோக்கியமான சமூகம் அவசியம் என்றும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருப்பூர் மாவட்டம் குமரிக்கல்பாளையத்தில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் விவசாயிகள் மற்றும் அப்பகுதி மக்களிடையே கலந்துரையாடிய அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பண்டைய கால நாகரிகம் குறித்த அடையாளங்கள் காணப்படுவதால் இப்பகுதியில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

<<<<>>>>

அனைத்து துறைகளிலும் தமிழகம் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அனைத்து தரப்பு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாநில அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மிகச் சிறந்த மருத்துவக் கட்டமைப்பை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மருத்துவ சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக அவர் கூறினார்.

மக்கள் பயனடையும் வகையில் மாநிலம் முழுவதும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் புதிய காப்பீடு அட்டைகள் வழங்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டத்தில் பனைமரங்களின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக பனைமரங்களை பாதுகாக்கும் வகையில் பள்ளி மாணவர்கள் மூலம் பனை விதைகளை சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte – Vijayakumar – 35 sec)**

<<<<>>>>

இனி . . .

மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்.

**(Sound Byte – Music – 10 Sec)**

சேவை, நல்லாட்சி, ஏழைகளின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதன் காரணமாக நாடு பெரிய அளவிலான மாற்றங்களை கண்டுள்ளது.

இதுதொடர்பான செய்தி தொகுப்பில் இன்று நிதி சீர்திருத்தங்கள் மூலம் நடுத்தர மக்கள் அதிகாரம் பெற்றுள்ளது குறித்து கேட்கலாம்.

**(Voice Over / Closing Music – 92 sec)**

***(VO)***

*நாட்டின் வளர்ச்சிப்பாதையில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நடுத்தரப் பிரிவினர் மையமாக திகழ்ந்து வருகிறார்கள். அவர்களின் விருப்பங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றின் மீது உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*வரி சீர்திருத்தங்கள் மற்றும் நிவாரணம், சமூக பாதுகாப்பு, திறன் மேம்பாடு போன்றவை நடுத்தர பிரிவினருக்கு அதிகாரம் அளிக்கும் அரசின் முயற்சிகளில் முக்கிய தூண்களாக விளங்கி வருகின்றன.*

*புதிய வரி விதிப்பு திட்டத்தின்கீழ், ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாய் வரை வரி விலக்கு அளித்து, மத்திய பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.*

*முன்கூட்டியே வருமான வரியை தாக்கல் செய்பவர்களுக்கு விரைவான எளிமையான மற்றும் அதிக வெளிப்படைத் தன்மையுடன் கூடிய நடைமுறை அளிக்கப்படுகிறது.*

***UPS*** *எனப்படும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டம், 25 ஆண்டுகள் பணியாற்றிய அரசு ஊழியர்களுக்கு அவர்களின் அடிப்படை ஊதியத்தில் 50 சதவீத ஓய்வூதியத்தை உறுதி செய்துள்ளது.*



*மேலும், கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த 8 புள்ளி இரண்டு என்ற பணவீக்க விகிதம் ஐந்து சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. திறன் மேம்பாட்டிற்கான நடவடிக்கையும் சம அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*பிரதமரின் திறன் மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ஒரு கோடியே 63 லட்சம் இளைஞர்கள் தொழில் பயிற்சி பெற்றுள்ளனர். தேசிய தொழில் பழகுனர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கடந்த 2016-ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலைகளில் 40 லட்சம் பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.*

*2014-ஆம் ஆண்டு 9 ஆயிரத்து தொள்ளாயிரமாக இருந்த தொழிற்பயிற்சி நிலையங்கள், கடந்த ஆண்டில் 14 ஆயிரத்து 600-ஆக குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளன.*

*அரசின் இதுபோன்ற பல்வேறு முயற்சிகளால் நடுத்தர பிரிவினருக்கு உண்மையான அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. அரசின் அணுகுமுறை தெளிவாக உள்ளது. நாட்டு மக்களின் கருத்துக்களை அறிந்து நடைமுறைகளை எளிமைப்படுத்தி, அவர்களுக்கான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே அரசின் நோக்கம் என்றால் அது மிகையல்ல.*

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

வாகனங்கள், செமிகண்டக்டர், மொபைல்ஃபோன் உற்பத்திக்கு தேவையான அரியவகை தாதுக்களை ஏற்றுமதி செய்ய சீனா ஒப்புதல் வழங்கியுள்ளது.

<<<<>>>>

கிரீசின் வடபகுதியில் அமைந்துள்ள அத்தோஸ் மலையை ஒட்டிய பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 5 புள்ளி 3ஆக பதிவாகியுள்ளது.

<<<<>>>>

ஜப்பானின் ஒசாகா மாகாணத்தில் நடைபெற்ற சர்வதேச கண்காட்சியில் அமைக்கப்பட்ட அரங்குகளில் முதல் 5 இடத்தில் இந்திய அரங்கமும் இடம்பெற்றுள்ளது.

<<<<>>>>

ஹரியானா மாநிலம் குருகிராமில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு தொடர்பான வழக்கில் **Goldybrar** உள்ளிட்ட 5 பேருக்கு எதிரான குற்றப்பத்திரிகையை தேசிய புலனாய்வு முகமை தாக்கல் செய்துள்ளது.

<<<<>>>>

அசாமில் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக 3 லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 11 பேரின் குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகையாக தலா 25 லட்சம் ரூபாய் வழங்க அம்மாநில முதலமைச்சர் திரு. சித்தராமையா உத்தரவிட்டுள்ளார்.

<<<<>>>>

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 286 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு. மூர்த்தி வழங்கினார்.

<<<<>>>>

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் சத்துணவுக்கான முட்டையின் எடை குறைவாக உள்ளதாக நுகர்வோர் பாதுகாப்புக்குழுவினர், ஒன்றிய ஆணையரிடம் புகார் மனு அளித்துள்ளனர்.

<<<<>>>>

சேலம் மாவட்டம் ஏற்காடு மலைப்பகுதியில் சரக்கு வாகனம் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 3 பேர் படுகாயமடைந்தனர்.

<<<<>>>>

ராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 50 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

<<<<>>>>

திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் அரசு கலை, அறிவியல் கல்லூரி அடுத்த மாதம் முதல் செயல்பட உள்ளதாக ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

12-ஆம் வகுப்பு முடித்த மாணவர்கள் உயர்கல்வி பயில வழிகாட்டுவதற்கான கட்டுப்பாட்டு அறை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திறக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தைவான் ஓபன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா மேலும் 2 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

இப்போட்டியின் 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

<<<<>>>>

**Santo Domingo** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சஹஜா எமலாபள்ளி - ஜப்பானின் **Hiroko Kuwata** இணை இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

டொமினிக் குடியரசில் நடைபெற்றும் வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-3 என்ற செட் கணக்கில் கனடாவின் **Annabelle Xu** – சீனாவின் **Yichen Zhao** இணையை வென்றது.

**<<<<The End>>>>**